**பண்டாரவலை மாநகர சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 05 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 07 திகதியன்று செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பண்டாரவலை மாநகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 3,428,180 ஆல் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் 03 இறைவரிப் பிரிவுகளிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 260,134 கழிவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் 03 இறைவரிப் பிரிவுகளிலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 125,984 பிடியாணைக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான இறைவரி வருமானம் ரூபா 64,184 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் பிணைவைப்பு நடைமுறைச் சொத்து ரூபா 594,306 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஊ) நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 70,519 பெறுமதியான பதிவேட்டுப் பொருட்கள் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை களியாட்ட வரி வருமானம் ரூபா 153,152 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வாடகை அடிப்படையில் வழங்கப்படுகின்ற எவ்ஜீஜே வணிகங்களிலிருந்து ஒரே தடவையில் அறவிடப்பட்ட பெறுமதிகளை (Key Money) வங்கியில் வைப்புச் செய்தமை மூலம் பெறப்பட்ட வட்டி ரூபா 816,976 ஆல் நிதிக்கூற்றுக்களில் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார நிலையங்களை (வர்த்தகம்) வாடகைக்கு வழயங்கியமையால் ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 532,784 நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஒ) 2014 ஆம் ஆண்டில் உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 82,860 பெறுமதியான 20 லீற்றர் அளவுடைய 300 குப்பைத் தொட்டிகள் இறுதி இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டில் உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 260,385 வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டில் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 213,124 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஃ) மீளாய்வாண்டில் நீர்க் கட்டண வருமானம் ரூபா 133,179 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய நீர்க் கட்டணம் ரூபா 260,824 ஆல் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) முன்னைய ஆண்டில் சந்தையினை குத்தகைக்கு வழங்கியமையின் கீழ் பெறப்பட வேண்டிய ரூபா 1,291,751 வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) மீளாய்வாண்டின் வாடிவீட்டு முகாமைத்துவ கட்டண வருமானம் ரூபா 1,633,500 ஆல் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கீ) மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,147,437 ஆல் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கு) மீளாய்வாண்டின் ரூபா 59,968 நிலையான வைப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) மீளாய்வாண்டில் சீவலி வீதியில் இடம்பெற்றிருந்த நட்டத்திற்காக தனியார் நிர்மாண நிறுவனமொன்றிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 4,000,000 வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 கணக்க விடயங்களிற்குரிய மீதிகளை அதனோடொத்த பட்டோலைகளிலுள்ள மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 685,679 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 98,104,798 ஆகக் காணப்பட செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 75,889,806 ஆகக் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

(அ) தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ரூபா 47,296,082 கூட்டுத்தொகையான 03 சொத்து விடயங்களையும் ரூபா 58,815,233 கூட்டுத்தொகையான 02 பொறுப்பு விடயங்களையும் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

(ஆ) மகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூபா 110,400 பெறுமதியான 400 குப்பைத் தொட்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டோரின் பெயர்ப் பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள்,விதிகள் மற்றும்பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் | |
| | (i) 42 ஆம் பிரிவு | அனுமதியற்ற 34 நிர்மாணங்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 218 ஆம் பிரிவு | 2014, 2015 ஆம் ஆண்டுகளிற்குரிய நிர்வாகம் தொடர்பான விபரமான அறிக்கை அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) 247 (அ) (ஆ) பிரிவுகள் | 23 வர்த்தக நிறுவனங்களால் 2016 ஆம் ஆண்டிற்காக அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படாதிருந் ததுடன், அது தொடர்பில் சபையின் கவனம் திரும்பியிருக்கவில்லை. |
| | (iv) 230 (1) ஆம் பிரிவு | மாநகர சபை இறைவரி எல்லையின் 1 முதல் 9 வரையிலான இறைவரிப் பிரிவுகளிற்காக 2007 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டு வரை வரி அறவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1980 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 23 அ பிரிவு | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய 09 வணிகங்களிற்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாது வர்த்தக அனுமதிப்பத்திரம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு அதிகாரச்சட்டம் | 2004 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலும் 30 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கான உதவுதொகைகள் மீது ரூபா 61,311 மிகை அறவீடு செலுத்தப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டல் | ரூபா 200 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதிகள் அமைச்சரவை கொள்வனவுச் சபையின் கீழ் கையளிக்கப்படவேண்டிய போதிலும், ரூபா 434,469,751 நிர்மாணங்கள் மாநகர சபையினால் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. |
| (உ) 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23(அ) பிரிவு | 2016 ஆம் ஆண்டிற்காக மயானங்கள், சேதனப்பசளை பிரிவு மற்றும் தகனச் சாலைகளிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) இலங்கைசனநாயகசோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 168, 177(1), 185 | 2016 மார்ச் 27 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 4,000,000 இற்காக பற்றுச்சீட்டு வழங்கப்படாதிருந்ததுடன், கணக்குகளில் பதிவுசெய்யப்பட்டிருக்கவுமில்லை. அக்காசோலை 2017 மார்ச் வரையிலும் வங்கியில் வைப்புச் செய்யப்படாமையால் மதிப்பிழந்தமை காரணமாக சபைக்கான வருமானம் இழப்பாகியிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளைத் தாண்டிய ரூபா 3,618,949 பெறுமதியான வைப்புக்கள் கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) இலங்கைசனநாயகசோசலிசக் குடியரசின் தாபனவிதிகள் கோவை | |
| (i) XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | 20 உத்தியோகத்தர்களிடமிருந்து சபைக்கு அறிவடப்பட்ட வேண்டிய ரூபா 1,358,309 ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் | |
| • 4.1 மற்றும் 6.1.1 ஆம் பிரிவுகள் | ஆதனக் கடன்களைப் பெற்றுக்கொண்ட மற்றுறம் 05 ஆண்டுகளிற்கு மேலாக அரசாங்க வதிவிடங்களைப் பயன்படுத்திய 04 உத்தியோகத்தர்களிற்கு அரசாங்க வதிவிடங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன். இரண்டு உத்தியோகத்தர்களிற்கு தொடர்ந்தேற்சியாக வதிவிடங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| • 4.2 ஆம் பிரிவு | காத்திருத்தல் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (எ) | நிதி அமைச்சுச் செயலாளரின் 2015 யூலை 10 ஆந் திகதிய PFD/ASD/02/Veh-circular/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை. | நிறுவனத்திற்குச் சொந்தமான பழுதடைந்த மற்றும் பயன்படுத்த முடியாத 09 வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஏ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 27 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை | ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 07 ஊழியர்களிற்காகம் தற்காலிக அடிப்படையில் சேவையாற்றி வருகின்ற 11 ஊழியர்களிற்காகவும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உதவு தொகைகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஊழியர் சேமலாப நிதிய இலக்கங்கள் மற்றும் பீ அட்டைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | 1989 சனவரி 20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க இடைக்கால யாப்பு | 2016 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டிருந்த வாகனங்களில் 198 வாகனங்களிற்கு தரிப்பிட அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்காமை காரணமாக ரூபா 594,000 வருமானம் சபைக்கு இழப்பாகியிருந்தது. |
| (ஓ) | உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் 2015 யூலை 06 ஆந் திகதிய SEC/2015/05 ஆம் இலக்க சுற்றறிக்கை. | 04 உத்தியோகத்தர்களிடமிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி ரூபா 19,080 குறைவாக அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. |

### 1.3.6 இனங்காணப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டிற்கான பேரேட்டுக் கணக்குகளின் பரிசோதனையின் போது ரூபா 550,964 பெறுமதியான கொடுக்கல் வாங்கல் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு முடிந்திருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,383,629 ஆகக் காணப்பட்டதுடன், அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 43,001,739 ஆகக் காணப்பட்டது.

### 2.3 வருமானநிர்வாகம்

### 2.3.1 வருமானச் சேகரிப்புச் செயலாற்றல்

2016 திசெம்பர் 01 ஆந் திகதியில் உள்ளவாறு மாநகர சபை நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 54,367,288 ஆகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட

வருமானத்தில் 27 சதவீதம் அல்லது ரூபா 10,892,776 தொகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.2 குத்தகை வாடகை

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை கடை வாடகை ரூபா 4,684,192 ஆகக் காணப்பட்டதுடன், 174 கடைகளிற்குரிய 06 மாதம் முதல் 75 மாதங்கள் வரையிலான காலவீச்சிலமைந்த நிலுவை கடை வாடகை ரூபா 3,926,648 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 நவம்பர் 10 ஆந் திகதியளவில் பண்டாரவலை மாநகர சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட 239 கடைகள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படாதும் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்த பின்னர் அவற்றை புதுப்பிக்காமலும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. 2012 இன் விலைமதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருந்ததுடன், அந்த வாடகையினை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பண்டாரவலை மாநகர சபைக்குச் சொந்தமான கோபியாவத்த காணியினை குத்தகைக்கு எடுத்திருந்த 18 ஆட்களிடமிருந்து 2016 ஆம் அண்டிற்காக ரூபா 93,383,468 நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீர்க் கட்டண வருமானம்

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 5,043,412 ஆகும். அதில் ரூபா 2,230,499 முன்னைய ஆண்டினதும் அதற்கு முன்னைய ஆண்டுகளினதும் நிலுவை நீர் கட்டணமாக காணப்பட்ட போதிலும், அந்தக் கட்டணங்களை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் சனவரி முதல் செப்தெம்பர் வரை தேசிய நீர்வழங்கல் வழிகாலமைப்புச் சபையிடமிருந்து நீரை மொத்தமாகக் கொள்வனவு செய்து நீர்ப் பாவனையாளர்களிற்கு வழங்கியமையால் ரூபா 225,858 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) 1646 நீர் பாவனையாளர்களிற்கு நீர் மானிகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணமாக அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 1,492,248 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ) மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 185(ஊ) பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட பதவியணியில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்த ஆதனக் கடனிற்கான ரூபா 32,579 வட்டி பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சிடமிருந்து மீள்நிரப்பப் பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சநனாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 1645(ஆ) பிரகாரம் வாகனங்களைப் பயன்படுத்துகின்ற உத்தியோகத்தரின் சான்றுறுதிப்படுத்தல் மற்றும் முறையான அங்கீகாரமின்றி ZA-4922 ஆம் இலக்க பெகோ வாகனத்திற்கு ரூபா 18,155 பெறுமதியான 191.10 லீற்றர் எரிபொருள் லெவிடப்பட்டு நிர்மாண வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அந்த 09 நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பில் மாநகர சபையினால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆம் ஆண்டில் சபைக்குரிய 06 வாகனங்களின் மைலோ மானிகள் செயலிழந்திருந்ததுடன் ஓடிய தூரங்கள் அண்ணளவாகக் குறிப்பிடப்பட்டு 2016 ஆம் ஆண்டில் ரூபா 954,750 பெறுமதியான 10,050 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 விளைவற்ற / குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

மாநகர சபைக்குச் சொந்தமான கெப் வாகனம், லொறி மற்றும் கை உழவு இயந்திரம் என்பன விளைவற்றுக் காணப்பட்டதுடன், திருத்தி பாவனைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) மாநகர சபையாக மாற்றமடைவதற்கு முன்னர் பண்டாரவலை பிரதேச சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 02 கடைகளிலிருந்து வாடகையினை அறவிட்டுக் கொள்வதற்காக பண்டாரவலை பிரதேச சபையினால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. 2012 நவம்பர் 08 ஆந் திகதி நிலுவை கடை வாடகையாக ரூபா 398,970 இனை பண்டாரவலை மாநகர சபைக்குச் செலுத்துவதற்கு குற்றவாளிகள் இணங்கியிருந்த போதிலும், இந்தக் இணக்கப்பாட்டைக் கருத்திற்கொள்ளாது குறித்த குற்றவாளிகளிடமிருந்து ரூபா 210,940 (வரி நீங்கலாக) அறவிடப்பட்டிருந்தமை காரணமாக சபைக்கு ஏற்பட்டிருந்த இழப்பு ரூபா 188,030 ஆகும்.

(ஆ) ரூபா 29,750 பெறுமதியான 25 கிலோ கிராம் கொண்ட 119 சேதனப்பசளை பக்கட்டுக்கள் மற்றும் ரூபா 58,850 பெறுமதியான 5 கிலோ கிராம் கொண்ட 1,177 பக்கட்டுக்கள் குறைவாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

(அ) பண்டாரவலை மாநகர சபை 2013 ஆம் ஆண்டில் ரூபா 88,634,140 பெறுமதிக்கு மொத்த விற்பசைன் சந்தை, குளம் மற்றும் நகரம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கும், ரூபா 131,317,317 பெறுமதியான மூன்று நிர்மாணங்களை மேற்கொள்வதற்கும், ரூபா 10,033,686 மற்றும் 33,456,186 பெறுமதியான 1, 2, 3, 4, 5, 6, 7 பகுதிகளை நிர்மாணிப்பதற்கும் முறையே நவலோக நிர்மாணக் கம்பனி, விஜயவர்தன கம்பனி, லக்விஜய கம்பனி மற்றும் எக்ரோ கெமிகல் கம்பனி ஆகியவற்றுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டிலிருந்து ஒரு வருடத்திற்குள் நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், நிர்மாணங்கள் பூரணப்படுத்தப்பட் டிருக்கவில்லை.

(ii) முற்பணமாக நவலோக கம்பனிக்கு ரூபா 17,726,828 தொகையும் லக்ஜய கம்பனிக்கு ரூபா 4,106,483 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மொத்த விற்பசைன் சந்தையிலுள்ள கடைகளை வழங்குவதற்காக கடை உரித்தாளர்களை தெரிவுசெய்வதற்கு உரிய முறையொன்று பின்பற்றப்பட்டிருக்க வில்லை.

(iv) 2014 ஆம் ஆண்டில் புதிய நிர்மாணங்களிலிருந்து வியாபார நிலையங்களைப் பெற்றுக்கொள்கின்ற வர்த்தகர்களிடமிருந்து ரூபா 317,700,000 அறவிடப்பட வேண்டிய போதிலும், அத் தொகையில் ரூபா 242,415,231 அல்லது 76 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சீவலி வீதியிலுள்ள கடைத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக ரூபா 30,815,862 பெறுமதியான ஒப்பந்தம் 2015 ஏப்ரல் 02 ஆந் திகதி நுவன் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. து தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இதுவரை இக்கடைத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கேள்வி அறிவித்தலின் பிரகாரம் 25 வர்த்தகர்களிற்குக் கடைகளை வழங்குவதற்காக ரூபா 46,175,093 அறவிடப்பட வேண்டிய போதிலும், அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவைப் பணம் ரூபா 25,991,140 ஆனதுடன், பெறவேண்டிய தொகையில் அது 56 சதவீதமாகும்.

(iii) உத்தேச கடைத் தொகுதியினை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வீதிப் பாதுகாப்பிற்கு உட்பட்ட பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

(iv) 2016 இல் இந்த இடம் நிலச்சரிவுக்கு உட்பட்டிருந்தமையால் மீண்டும் மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்காக ரூபா 1,312,000 பேராதனை பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(v) இக் கடைத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக 40 அடிகள் உயரமான மதகினை வெட்டுகையில் மாநகர சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ விடுதியொன்றும் சீவலி வீதியும் முழுமையாக அழிவடைந்திருந்ததுடன், அந்த நட்டம் பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.5 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

(அ) சேதனப் பசளைப் பிரிவில் 12 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களிற்காக கிருமி நாசினிகள், மாதாந்த மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை பெறுதல் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அநேக ஊழியர்கள் உடல் காயங்கள் மற்றும் தோல் நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சேதனப் பசளைப் பிரிவில் சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்த முடியாத அதிகளவு குப்பைகள் குவிக்கப்பட்டிருந்ததுடன், உக்காத பொலிதீன் அதிகளவு அங்கு குவிக்கப்பட்டிருந்தமையால் குப்பை மேட்டினை பாதுகாத்து நிர்மாணிக்கப்பட்டிருந்த சுவர்கள் வெடிப்புற்று குப்பை மேடு சரிந்து விழும் ஆபத்துக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) குப்பைகள் குவிக்கப்படுவதனால் சுற்றுச்சூழல் முழுவதும் அதிக துர்நாற்றம் வீசுவதன் காரணமாக ஈக்களினதும் நாய்களினதும் குடியிருப்பாக மாறியுள்ளமை மற்றும் சேதனப் பசளைப் பிரிவில் நீர் காணப்பட்டமையால் சுற்றுச்சூழல் மாசடைந்திருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டில் பாதீடானதுவருமானமற்றும் செலவினக் கட்டுப்பாட்டுக் கருவியாகபயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்தகொள்வனவுத் திட்டம்

---

மீளாய்வாண்டில் வருடாந்தகொள்வனவுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

---

2016 ஆம் ஆண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்படுத்தல்

---

மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கீழேகுறிப்பிடப்பட்டமுறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விசேடகவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாடு
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) வருமான நிர்வாகம்
(உ) இருப்புக் கட்டுப்பாடு